1969 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : போராட்டத்தில் ஈடுபட வில்லை என்றாலும், அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் நோக்கத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக ஆதரிக்கிறது. ஆனால், காங்கிரஸ் சர்க்கார் போட்டதை இங்குள்ள காங்கிரஸ் கட்சி எதிர்க்கவில்லை என்றார்கள். போகப் போக எதிர்க்க ஆரம்பித்துவிடுவார்கள், போகிற நிலைமையைப் பார்த்தால்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் குறித்து மூலக் கேள்வி அமைந்திருக்கிறது. இந்தக் கட்சி ஆதரிக்கிறதா, அந்தக் கட்சி ஆதரிக்கிறதா என்றெல்லாம் எப்படி அதிலிருந்து வரும்? வராது.

THIRU K. VINAYAKAM : One humble submission, Sir. The Hon. Speaker may not be right in saying that my question is out of order. In the note, partywise figures are given. That is why I asked whether some parties have taken part or not. My question is certainly in order.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை இருக்கிறதா, இல்லையா என்பது வேறு. ஆதரிக்கிறதா, இல்லையா என்பது மூலக் கேள்வி யிலிருந்து எழாது என்றுதான் சொல்லுகிறேன்.

World Bank Chief—Chief Minister meet

* 228 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the World Bank Chief met the Chief Minister about the 22nd November 1968?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கித் தலைவரைச் சந்தித்து, மாநில அரசின் சார்பில், தமிழக முதல் அமைச்சர் என்னென்ன பணிகளுக்கும் கடன்கள் கோரியிருந்தார்கள்? கோரிக்கைகள் என்னென்ன, அவர்கள் ஏற்றுக் கொண்டவை என்னென்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கோரிக்கைகள், அல்லது கடன் தேவை போன்ற முறையீடுகளை மாநில அளவில் தர முடியாது ; மத்திய சர்க்கார் மூலம் தான் உலக வங்கிக்குத் தரமுடியும். முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் திரு. மெக்னமாராவுடன் கலந்து பேசிய பின்னர் பத்திரிகையாளரிடம் பின் வருமாறு தெரிவித்தார். 'பாசனமே வேளாண்மையில் நமது முட்டுக்கட்டை ; நாம் இறைவைப் பாசனத்தையே பெரிதும் நம்பி யுள்ளதால், வலிமையுள்ள துளைக்கருவிகளும், மின்விசை ஏற்றக் கருவிகளும் தேவையென்றும், இம் மாநில அரசு குடியானவர் களுக்குத் தாராளமாகக் கடன் வழங்குவதாகவும், உழவுத் தொழிலுக்கு உதவி செய்வதாகவும், உலக வங்கித் தலைவரிடம் தெரிவித்ததாக அவர் குறிப்பிட்டார்'. தண்ணீர் தேங்குவதைத்

தவிப்பதற்காகத் தஞ்சாவூர் கழிமுகப் பகுதியில் வடிகால் திட்டம் ஒன்றை நிறைவேற்றுவதை முதல் அமைச்சர் வலியுறுத்தினர். இம் மாநில அரசின் அதிகாரி ஒருவரால் உருவாக்கப்பட்டு, மத்திய அரசின் ஆய்வில் உள்ள வேளாண்மைச் சீரமைப்புத் திட்டத்தைப் பற்றியும் குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

THIRU K. VINAYAKAM : Whereas only the Central Government is competent to negotiate with the World Bank Chief in the matter of loans to be given to us, is it not a fact that the Mayor of Madras met the World Bank Chief and asked for twenty crores of rupees and is it in order to allow a local body like the Corporation of Madras to negotiate?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மேயர் அவர்கள் கடன் கேட்டாரா என்று எனக்குத் தெரியாது. உடன் இருந்து பார்த்திருந்தால் தெரிந்திருக்குமோ என்னவோ. சென்னைத் தெருவிளக்குப் பிரச்சினை பற்றி மேயர், உலக வங்கித் தலைவரோடு பேசியதாகத்தான் எங்களுக்குக் கிடைத்த தகவல்.

Film Censorship Enquiry Committee

* 266 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Film Censorship Enquiry Committee has invited the views of the State Government during its sitting at Madras about the 10th September 1968?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

திரைப்படக் கொட்டகைகளுக்கு உரிமம் வழங்கல்

* 267 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-68-ம் ஆண்டில் நமது மாநிலத்தில் எத்தனை புதிய திரைப்படக் கொட்டகைகளுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டது ?

(இ) திரைப்படக் கொட்டகைகளுக்கு லைசென்ஸ் வழங்குவதில் அரசின் கொள்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) 76.

(இ) திரைப்படம் காண்பிக்கப்படுவதற்கான உரிமங்கள், தமிழ்நாடு 1955-ம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டம், அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றின் கீழ் முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. என். கிட்டப்பா : செமி பர்மனெட் தியேட்டர்களுக்கு உரிமை வழங்க இருப்பதாக அறிவிக்கப்பட்டதே, அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளனவா?